அரசு அலுவலர் பயிற்சி நிலையம்,

பவானிசாகர்

**CIVIL SERVICE TRAINING INSTITUTE, BHAVANISAGAR**

அனுப்புநர்:

திருமதி.வே.லதா, எம்.ஏ.,
மாவட்ட வருவாய் அலுவலர் / முதல்வர்,
அரசு அலுவலர் பயிற்சி நிலையம்,
பவானிசாகர்-638451,
ஈரோடு மாவட்டம்.

பெறுநர்:

ஆணையர்,
வணிகவரித்துறை,
4-ம் தளம், எழிலகம்,
சேப்பாக்கம்,
சென்னை - 600 005

ந.க.எண்.அ3/266/2024, நாள்.23 .01.2024

மதிப்பிற்குரிய அய்யா/அம்மையீர்,

பொருள்: பயிற்சி - அரசு அலுவலர் பயிற்சி நிலையம், பவானிசாகர் - இளநிலை உதவியாளர் / உதவியாளர்களுக்கான 41 பணி நாட்கள் கொண்ட சுருக்கப்பட்ட அடிப்படைப் பயிற்சி-**60-வது அணி** (**13.02.2024 முதல் 01.04.2024 முடிய**) - பயிற்சியாளர் சேர்க்கை - தொடர்பாக.

பார்வை: பயிற்சித் துறைத் தலைவர் அவர்களின் கடித எண்.பதுத/355/2023, நாள். 13.04.2023.

*********

பவானிசாகர் அரசு அலுவலர் பயிற்சி நிலையத்தில் **12.02.2024** அன்று நடைபெறும் இளநிலை உதவியாளர் / உதவியாளர்களுக்கான 41 பணி நாட்கள் கொண்ட சுருக்கப்பட்ட அடிப்படைப் பயிற்சி **60வது அணி** சேர்க்கைக்கு தங்கள் துறையிலிருந்து கீழ்க்கண்டுள்ள எண்ணிக்கையில் (**முதுநிலை அடிப்படையில்**) அலுவலர்களை பயிற்சிக்கு அனுப்புமாறும், 2018, 2019, 2020 மற்றும் 2021ம் ஆண்டுகளில் பணிவரன்முறை செய்யப்பட்டு பயிற்சி பெறாமல் உள்ளவர்களை விடுபடாமல் பயிற்சிக்கு அனுப்பி வைக்குமாறும், பயிற்சிக்கு வரும் பயிற்சியாளர்களிடம் கீழ்க்கண்ட ஆவணங்களை தவறாமல் கொடுத்தனுப்பும்படியும் சம்பந்தப்பட்ட அலுவலகத் தலைவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

1. பயிற்சிக்கு அனுப்பும் நபர்களின் விபரம் குறித்து பயிற்சி நிலையத்தால் வழங்கப்பட்ட பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பம்.
2. பணிவரன்முறை ஆணை நகல்
3. அடையாளச் சான்றுடன் கூடிய அசல் பணி விடுவிப்பு ஆணை.
4. ஒப்பந்தப் பத்திரம்
5. ஆதார் அட்டை நகல்

**60-வது அணிக்கான பயிற்சியாளர்கள் ஒதுக்கீட்டு விவரம்**

| | | |
|---|---|---|
| 1. | துறையின் பெயர் / பிரிவு | Commercial Taxes |
| 2. | அணி எண் | 60 |
| 3. | பயிற்சிக் காலம் | **13.02.2024 முதல் 01.04.2024 முடிய** |
| 4. | ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ள மொத்த பணியாளர்களின் எண்ணிக்கை (**முதுநிலை வரிசைப்படி பயிற்சிக்கு அனுப்பப்பட வேண்டும்**) ஒதுக்கீட்டின்படி அனுப்ப இயலாத நிலை ஏற்படின் அந்த விவரத்தை உடன் இவ்வலுவலகத்திற்கு தெரிவிக்க வேண்டும்) | **40 பணியாளர்கள் மட்டும்.** |
| 5. | பயிற்சியில் சேர்க்கப்படும் நாள் மற்றும் நேரம் | **12.02.2024 முற்பகல் 09.00 மணி** |
| 6. | பயிற்சியாளர் சேர்க்கை பணி நடைபெறும் இடம் | **டாக்டர் ஏ.பி.ஜே.அப்துல்கலாம் கலையரங்கம்** |

**அனைத்து துறைகள் / பிரிவுகள் / அலுவலகங்களுக்கான முக்கியக் குறிப்புகள்:**

1. **இப்பயிற்சி நிலைய இணைய தளம் (www.cstibhavanisagar.in-> Online Admission) 29.01.2024 அன்று காலை 09.00 மணி முதல் 06.02.2024 மாலை 05.00 மணி வரை மட்டுமே செயல்பாட்டில் இருக்கும்.**
2. **முதலில் பணம் செலுத்தும் 850 பயிற்சியாளர்கள் மட்டுமே இந்த பயிற்சி அணியில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். அதற்கு பிறகு பணம் செலுத்தும் பயிற்சியாளர்கள் அனைவருக்கும் அடுத்த அணியில் தான் பயிற்சி வழங்க இயலும் என்ற விவரம் தெரிவிக்கப்படுகிறது.**
3. **பயிற்சிக்கு விடுவிக்கப்படும் முதுநிலையில் உள்ள பணியாளர்களுக்கு முன்கூட்டியே பயிற்சிக் கட்டணத்தைச் செலுத்த உரிய அறிவுரைகள் வழங்குமாறு தெரிவிக்கப்படுகிறது.**
4. **இளையவர் பணம் செலுத்திவிட்டார். பயிற்சியில் சேர்த்துக் கொள்ளப்பட்டார் எனவும், முதுநிலையில் உள்ளவர் பணம் செலுத்தவில்லை. பயிற்சியில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை என்பதற்கு இப்பயிற்சி நிலையம் எவ்விதத்திலும் பொறுப்பாகாது.**
5. **ஆகவே, பயிற்சிக்கு விடுவிக்கப்படும் பணியாளர்கள், முன்கூட்டியே பயிற்சிக் கட்டணத்தைச் செலுத்தி, தங்களது முதுநிலையை உறுதி செய்து கொள்ள வேண்டும். இது அந்தந்த துறை சார்ந்த பணியாகும்.**

- **முந்தைய அணிகளில் பயிற்சி பெற்று ஒரு சில காரணங்களுக்காக பயிற்சியின் இடையே விடுவிக்கப்பட்டவர்களை இப்பயிற்சி அணியில் சேர்வதற்காக விடுவிக்கக்கூடாது. அவர்கள் எஞ்சிய நாட்கள் மட்டும் பயிற்சி பெற வேண்டிய பயிற்சியாளர்கள் ஆவர். அவர்களுக்கு தனியர் பணிபுரியும் அலுவலகத்தின் மூலம் கடிதம் அனுப்ப வேண்டும். அவர்களுக்கு தனியாக அழைப்புக் கடிதம் அனுப்பப்படும்.**
- **பெரும்பாலான துறைகளிலிருந்து அலுவலர்கள் நிலுவையிலுள்ள பயிற்சியாளர்களின் விவரத்தை மட்டும் அனுப்பிவிட்டு, பயிற்சியாளர்களை பயிற்சிக்கு அனுப்புவதில்லை. 900 பயிற்சியாளர்களுக்கு அழைப்பாணை அனுப்பினால் 700 பயிற்சியாளர்கள் கூட பயிற்சியில் கலந்து கொள்வதில்லை. இதனால் தொடர்ந்து முந்தைய ஆண்டு பயிற்சி பெற வேண்டியவர்களின் நிலுவை என அறிக்கைகளில் வந்த வண்ணம் உள்ளது. எனவே மருத்துவக் காரணங்களைத் தவிர்த்து வேறு வகையிலான காரணங்களுக்காக பயிற்சிக்கு அனுப்புவதில் விடுபடாமல் அனைவரையும் பயிற்சியில் கலந்து கொள்ளுமாறு பார்த்துக் கொள்ள வேண்டும்.**
- இத்துடன் இணைக்கப்பட்டுள்ள இணைப்பு 1-ல் பயிற்சியாளர் பயிற்சியில் சேர்வதற்கு முன் பின்பற்றப்பட வேண்டிய வழிமுறைகள் அனைத்தும் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, இணைப்பு 1-ன் நகலை அனைத்துப் பயிற்சியாளர்களுக்கும் தவறாமல் அனுப்பி பயிற்சியில் கலந்து கொள்ள ஏற்பாடு செய்ய கேட்டுக் கொள்ளப்படுகிறது.
- **சில தலைமை அலுவலர்கள், தங்கள் சார்நிலை அலுவலர்களுக்கு இணைப்பு -1ன் நகலையும், முக்கிய குறிப்புகளையும் அனுப்புவதில்லை. இதனால் சேர்க்கையின்போது சில பயிற்சியாளர்கள் உரிய ஆவணங்களை முழுமையாக கொண்டு வருவதில்லை.**
- **பயிற்சிக்கு விடுவிக்கப்படும் பணியாளர்களுக்கு போதுமான அனுமதிக்கப்பட்ட பயண முன்பணம் பெற்று வழங்கப்படல் வேண்டும்**.
- **60-வது அணியின்** பயிற்சி சேர்க்கை அறிக்கையினை பணியாளர்கள் பயிற்சியில் சேர்ந்த மூன்று நாட்களுக்குப் பிறகு இப்பயிற்சி நிலைய இணையதள முகவரியான www.cstibhavanisagar.in வாயிலாக **e-joining Report**-ஐ பதிவிறக்கம் செய்து அலுவலக ஆவணங்கள் பராமரிப்பிற்கு வைத்துக் கொள்ளுதல் வேண்டும். **பயிற்சி சேர்க்கை அறிக்கை (Manual Copy) அஞ்சல் வழியாக அனுப்பப்படமாட்டாது.**
- அனைத்து துறைகள் / பிரிவுகள் / தலைமை அலுவலகங்கள், அழைப்புக் கடிதத்தில் கோரப்பட்டுள்ள எண்ணிக்கையில் முதுநிலை வரிசைப்படி பணியாளர்களை கட்டாயம் பயிற்சிக்கு விடுவித்தல் வேண்டும். தனிப்பட்ட காரணங்களுக்காகவோ அல்லது நிர்வாகக் காரணங்களுக்காகவோ போதுமான எண்ணிக்கையில் பணியாளர்களை பயிற்சிக்கு விடுவிக்கப்படுவதில்லை எனத் தெரிய வருகிறது. இது முற்றிலுமாகத் தவிர்க்கப்பட வேண்டும்.
- அனைத்துத் துறைத் தலைவர்களும் இவ்விவரத்தை தங்களது சார்நிலை அலுவலகங்களுக்கு உடனடியாக தெரிவித்து அழைப்புக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள எண்ணிக்கையிலான பணியாளர்களை விடுபடாமல் பயிற்சிக்கு உரிய காலத்தில் விடுவித்து அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

❖ இந்த பயிற்சிக் காலத்தில் விசாரணை / சாட்சி போன்ற வேறு காரணங்களுக்காகவோ மற்றும் பிற அலுவலகப் பணிகளுக்காகவோ பயிற்சியாளர்களை விடுவிக்க இயலாது என்ற விபரம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

❖ **தங்களது துறையில் 60வது அணிக்கு அனுப்பப்படுவர்கள் எண்ணிக்கையை இணைப்பு-2-ல் கண்டுள்ள படிவத்தில் கலம்3ல் குறிப்பிட வேண்டும்.**

❖ **தங்களது துறையில் 60வது அணிக்கு அனுப்பப்பட்டவர்கள் போக பயிற்சி பெற வேண்டி நிலுவையில் உள்ள பணியாளர்களின் ஆண்டு வாரியான விவரத்தை இணைப்பில் உள்ள படிவத்தில் தெளிவாக குறிப்பிட்டு principalcstibsr@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு உடன் அனுப்பி வைக்குமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.**

23/1/24
மாவஅ/முதல்வர்

23/1/24

**இணைப்பு:**

1. பயிற்சியாளர்களுக்கான முக்கிய குறிப்புகள் (இணைப்பு-1)
2. பயிற்சி பெற வேண்டி நிலுவையில் உள்ளவர்கள் விவரம்அனுப்புவதற்கான படிவம் (இணைப்பு-2)